Registered as a News Paper

பொழிவு: 28
குவிப்பு: 08
பக்கங்கள்:08
விலை: 50/-
ஆவணி: 2023

(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2021"

"ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக 42வது ஆண்டுப்பயணம்"

## மடுத்திருத்தல ஆவணி மாத வருடாந்த திருவிழா



மன்னார் மறைமாவட்டத்தின் மடுத்திருத்தல ஆவணி மாத வருடாந்த திருவிழாவானது கடந்த 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று திருத்தல பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெற்று வந்த நிலையில் 14ஆம் திகதி திங்கட்கிழமை நற்கருணை விழா இடம்பெற்றது.

இத்திருவிழா திருப்பலியை திருத்தந்தையின் இலங்கைக்கான திருத்தூது பிரதிநிதி பேரருட்தந்தை பிறைன் உடக்குவே ஆண்டகை அவர்களும் நற்கருணைவிழா திருப்பலியை மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை கிறிஸ்துநாயகம் அடிகளார் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர். திருவிழா திருப்பலி நிறைவில் அன்னையின் திருச்சுரூப பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெற்றன.

இத்திருவிழாவில் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் 11 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டதுடன் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களும் இந்நிகழ்விற்கு வருகை தந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.●

## உலக இளையோர் தின சிறப்புக் கொண்டாட்டம்



உலக இளையோர் தின சிறப்புத் திருப்பலியை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த 06.08.2023 அன்று போர்த்துக்கலில் உள்ள லிஸ்பன் நகரில் நிறைவேற்றினார். இயேசுவின் உருமாற்றப் பெருவிழாவை திருஅவை சிறப்பிக்கும் அந்நாளில், போர்த்துக்கீசிய மொழியில் திருப்பலியானது நிறைவேற்றப்பட்டது. இலத்தீன் வழிபாட்டுமுறை முதுபெரும்தந்தை அவர்களின் வரவேற்புடன் ஆரம்பமான இத்திருப்பலியில் முதல் வாசகம் இஸ்பானிய மொழியிலும், இரண்டாம் வாசகம் ஆங்கில மொழியிலும், நற்செய்தி வாசகம், போர்த்துக்கீசிய மொழியிலும் வாசிக்கப் பட்டன. நற்செய்தி வாசகத்தைத் தொடர்ந்து திருத்தந்தையின் மறையுரையும் அதனைத் தொடர்ந்து நம்பிக்கையாளர் மன்றாட்டுக்கள் போர்த்துக்கீசியம், சீனம், போலந்து, ஆங்கிலம், அரபு, ஜெர்மானியம், இத்தாலியம் ஆகிய மொழிகளில் எடுத்துரைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து திருப்பலியின் காணிக்கைப் பவனி மற்றும் நற்கருணை வழிபாட்டுக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. பல இலட்சக் கணக்கான மக்களும் இளையோரும் பங்கேற்ற இத்திருப்பலியின் நிறைவில் அனைவருக்கும் தன் சிறப்பு ஆசீரை அளித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அதன்பின் திருத்தந்தை உலக இளையோர் தினத்திற்கான சிலுவைகளை ஐந்து கண்டங்களைச் சேர்ந்த இளையோர் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தார். அதன்பின் அடுத்த உலக இளையோர் தினக் கொண்டாட்டத்திற்கான இடத்தையும் ஆண்டையும் அறிவித்தார். 2025ஆம் ஆண்டு இளையோர் யூபிலி தினக் கொண்டாட்டங்கள் உரோமிலும், 2027ஆம் ஆண்டிற்கான உலக இளையோர் தினக் கொண்டாட்டங்கள் தென்கொரியாவின் சியோலிலும் நடைபெற உள்ளதாக அறிவித்தார்.●

## பெரியகட்டு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா



கடந்த 05-08-2023 சனிக்கிழமை காலை 7.30 மணியளவில் பெரியகட்டு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாத் திருப்பலி திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இத்திருப்பலியில் குருக்கள் மற்றும் அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் கலந்துகொண்டு சிறப்பித்திருந்ததுடன் ஏராளமான இறைமக்களும் பங்குபற்றி புனிதரின் ஆசியை பெற்றுக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.●

## துயர் பகிர்கின்றோம்...



எமது கலையருவியின் மன்னார் கத்தோலிக்க ஊடகத்தின் இணைய தொகுப்பாளராக கடந்த நான்கு வருடங்களாக கடமையாற்றி வந்த திரு. ஜெகநாதன் டிறோன் அவர்கள் 13.08.2023 அன்று இறைபதமடைந்தார்.

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.●

"மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் பூமி"

# மன்னா
## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

**கிறிஸ்து இயேசுவில் அன்பார்ந்தவர்களே!**

இறைவன் இதுவரை காலமும் எம்மை நல்வழிப் படுத்தியதற்காக இறைவனுக்கு நன்றிகூறி தொடர்வது, இம்மாதம் 15ம் திகதி புனித கன்னிமரியாவின் விண்ணேற்பு பெருவிழாவை திருஅவை நினைந்து கொண்டாடுகின்றது. எமது மன்னார் மறை மாவட்டத்தின் உயிரூட்டமாகிய மடுஅன்னையின் திருவிழாவும் இத்தினத்திலேயே கொண்டாடப்பட்டது. புனித தாய் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணேற்றம் அடைந்த மகிமையின் விழாவை கொண்டாடும் நாம், எம் ஒவ்வொருவரினதும் ஆன்மா எத்தன்மையில் உள்ளது? என்பதை தியானிப்போம்.

இறைவனின் வார்த்தைக்கு தன்னை முழுதும் அர்ப்பணித்து இறைவாக்குதனை தனது உடலிலும், மனதிலும் முற்றும் முழுதாக நிறைத்தவர் அன்னை மரியா. அவரது தாழ்மையான கீழ்ப்படிதலின் விளைவே இறைவன் அவரை மேன்மைப்படுத்தி உடலோடும் ஆன்மாவோடும் அன்னை மரியாவை விண்ணேற்றம் பெற செய்தமை ஆகும். எமது அன்றாட வாழ்வியல் நிலைகளில் பணி நிலைகளில் தாழ்மை நிறை கீழ்ப்படிதல், பிறரன்பு பணியில் ஈடுபடுதல் போன்ற இறைவிசுவாச வாழ்வு பண்புகள் சிறந்து விளங்குகின்றதா? என்பதை தியானிப்போம்.

அத்தோடு தன்நிறைவற்றதோர் நாட்டிலே வாழும் நாம் இன்னும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான நிலைகளிலேதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அண்மைக் காலங்களாக இலங்கை அரசிற்கு எதிராக பல்வேறு வகையான அஹிம்சை வழிப்போராட்டங்கள் நடைபெற்ற வண்ணமே உள்ளது. உண்ணா விரதங்கள், அஹிம்சை வழி நடைப்பயணங்கள் என மக்கள் இன, மத, மொழி என்ற பிரிவினை இன்றி ஒற்றுமையாக இணைந்து அரசுக்கெதிரான போராட்டங்களை நடாத்திக் கொண்டே இருக்கின் -றார்கள். ஆனாலும் மக்களின் தேவைகளையோ, கோரிக்கைகளையோ கண்டு கொள்ளாத அரசியல் சூழமைவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மனிதர்களால் ஒருபோதும் எம்மை போசிக்க முடியாது இறைவன் ஒருவரே என்றும் எம்மை முழுமையாக்க வல்லவர் என்ற இறை நம்பிக்கையுடன் அன்னை மரியாள் வழியாக செபமாலை ஓதி இறைவரம் வேண்டுவோம். எம்மையும் எம் மக்களையும் இறைவன் வழிநடத்திடுவார்.

நன்றி

**என்றும் கிறிஸ்துவில்**
**அருட்பணி. ம. செல்வநாதன் பீரிஸ்**
**மன்னா பதிப்பாசிரியர்**

# மன்னார் மறைமாவட்ட அருட்பணியாளர்களுக்கான புதிய பணி நியமனங்கள்

அருட்பணி.S.எமிலியானுஸ்பிள்ளை - பங்குத்தந்தை, மாந்தை
அருட்பணி. S.A.H. ஜெயபாலன் குரூஸ் - விடுமுறை
அருட்பணி. S.K. தேவராஜா - விடுமுறை
அருட்பணி. S. ஜொய்ஸ் பெப்பி சோசை - பங்குத்தந்தை, தாழ்வுபாடு
அருட்பணி. A. ஞானப்பிரகாசம் - பரிபாலகர், மடு திருத்தலம், மறைக்கோட்ட முதல்வர், மடு மறைகோட்டம்.
அருட்பணி. C. அந்தோனிதாஸ் டலிமா - பங்குத்தந்தை, வவுனியா, கல்விப் பொறுப்பாளர், வவுனியா மாவட்டம்.
அருட்பணி. S. மரியதாஸ் லியோன் - பங்குத்தந்தை, சிறுக்கண்டல்
அருட்பணி. P. கிறிஸ்துநேசரட்ணம் - பங்குத்தந்தை, தோட்டவெளி
அருட்பணி. S. வசந்தகுமார் - அதிபர், மடுமாதா சிறிய குருமடம்
அருட்பணி. S. ஜெயபாலன் - பங்குத்தந்தை, செட்டிகுளம், காணிப் பொறுப்பாளர், வவுனியா மாவட்டம்.
அருட்பணி. S. அன்ரன் - பங்குத்தந்தை, பேசாலை
அருட்பணி. S. பிரான்சிஸ் மரி டீ கோல் - இயக்குநர், குடும்பம், முதியோர், பொதுநிலையினர் ஆணைக்குழு.
அருட்பணி. S. டக்ளஸ் மில்ரன் லோகு - இயக்குநர், கலையருவி, பதிப்பாசிரியர் ''மன்னா'', பொறுப்பாளர், மன்னார் கத்தோலிக்க அச்சகம்''
அருட்பணி. G. அன்ரனிற்றோ அருள்றாஜ் குரூஸ் - இயக்குநர், வாழ்வுதயம், பொறுப்பாளர், மடுமாதா வைத்தியசாலை
அருட்பணி. F. யூட் ஞானறாஜ் குரூஸ் - பங்குத்தந்தை, உயிலங்குளம்
அருட்பணி. J. ஜெஸ்லி ஜெகானந்தன் - இயக்குநர், ஓய்வுநிலை குருக்கள் இல்லம்
அருட்பணி. A. மரியதாசன் குரூஸ் (றொக்சன்) - இயக்குநர், மறைக்கல்வி நிலையம், கல்விப் பொறுப்பாளர், மன்னார் மாவட்டம்
அருட்பணி. M. செல்வநாதன் பீரிஸ்- பங்குத்தந்தை, காத்தான்குளம்
அருட்பணி. S. அன்ரன் தவராஜா - இயக்குநர், "மார்டப்", நிறுவனம், திருவழிபாட்டு ஆணைக்குழு
அருட்பணி. V. எமில் எழில்றாஜ் - பங்குத்தந்தை, பெரியகட்டு, பொறுப்பாளர், சர்வமத அமைப்பு.
அருட்பணி. S. அருட்குமரன் - இயக்குநர், கல்வி நிலையம், இறம்பைக்குளம், வவுனியா
அருட்பணி. R. ரெறன்ஸ் கலிஸ்ரஸ் குலாஸ் - நிதியாளர், மன்னார் மறைமாவட்டம். பொறுப்பாளர், மடுமாதா எரிபொருள் நிரப்பு நிலையம்.
அருட்பணி. L. றொணிஸ் நிமல் வாஸ் - பங்குத்தந்தை, சாந்திபுரம்
அருட்பணி. J. அமல்றாஜ் குரூஸ் - பங்குத்தந்தை, ஓமந்தை
அருட்பணி. L. ஜெஸ்மன்றாஜ் - கணக்காளர் - ஆயர்இல்லம் பொறுப்பாளர் - மறைமாவட்ட பாடகர் குழாம், மேய்ப்புப்பணி உதவி - மாந்தை.
அருட்பணி. T. ஜொலிமன் - பங்குத்தந்தை, பரீட்சார்த்தபங்கு, கன்னாட்டி
அருட்பணி. P.N. பிரசாந்தன் - பங்குத்தந்தை, குஞ்சுக்குளம்
அருட்பணி. G. கிருசாந்த் - வழிபாடு, மடு யூபிலி ஆண்டு
அருட்பணி. A.K. சூசைநாயகம் (கிளரேசியன் சபை) - பங்குத்தந்தை, பம்பைமடு
அருட்பணி. S. அருண்தாஸ் குரூஸ் - காணிகள் பொறுப்பாளர் - மன்னார் மாவட்டம். மேய்ப்புப்பணி உதவி - தலைமன்னார்.
அருட்பணி. V. ரஞ்சன் சேவியர் - உதவி இயக்குநர், கல்வி நிலையம், இறம்பைக்குளம், வவுனியா
அருட்பணி. A. அன்ரனி - உதவி பங்குத்தந்தை, வேப்பங்குளம்
அருட்பணி. S. லுமன் லோகு - உதவிப்பங்குத்தந்தை, முருங்கன்
அருட்பணி. S. அல்பன்றாஜ் - உதவிப்பங்குத்தந்தை, பேசாலை
அருட்பணி. S. யேசுபரநாதன் (டிக்சன்) - உதவிப்பங்குத்தந்தை, மன்னார்
அருட்பணி. C. கிளிங்ரன் - உதவிப் பரிபாலகர், மடு
அருட்பணி. S. டிசாந்தன் - உதவிப் பங்குத்தந்தை, அளவக்கை
அருட்பணி. V.R. பியோ தர்ஷன் - உதவிப்பங்குத்தந்தை, வங்காலை
அருட்பணி. K. ஜொனார்த்தன் கூஞ்ஞ - உதவி அதிபர், மடுமாதா சிறிய குருமடம்
அருட்பணி. ஜெல்த்சின் சார்ளஸ் - உதவிப்பங்குத்தந்தை, இறம்பைக்குளம், வவுனியா
அருட்பணி. F.X. றஜீவன் லியோன் - உதவிப்பங்குத்தந்தை, புனித செபஸ்தியார் பேராலயம், மன்னார்.
அருட்பணி. A. யூட்ஸ் முரளிதரன் - ஆன்மீக இயக்குநர், சுவிஸ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்
அருட்பணி. S. மில்ரன் தேவராஜா (நியூட்டன்) - மேய்ப்புப்பணி அமெரிக்கா
அருட்பணி. I. அன்ரனி சோசை - உயர்கல்வி, உரோமாபுரி

# இலங்கை தேசிய கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் 80ஆவது ஒன்றுகூடல்



இலங்கை தேசிய கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தின் 80ஆவது தேசிய கத்தோலிக்க இளையோர் ஒன்றுகூடல் ஓகஸ்ட் மாதம் 18,19, 20ஆம் திகதிகளில் குருநாகல் மறைமாவட்டத்தின் பன்னல பிரதேசத்தில் அமைந்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் முழுமனித உருவாக்கல் நிலையத்தில் நடைபெற்றது.

குருநாகல் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை டிமுது பொன்சேகா அவர்களின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய கத்தோலிக்க இளையோர் செயற்பாடுகளுக்கு பொறுப்பான ஆயரும் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயருமான பேரருட்தந்தை அன்ரன் றஞ்சித் அவர்களும் குருநாகல் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை கெரல்ட் அன்ரனி அவர்களும் தேசிய கத்தோலிக்க இளையோர் சம்மேளன இயக்குநர் அருட்தந்தை கலன பீரிஸ் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இலங்கையின் 12 மறைமாவட்டங்களிலிருந்தும் 130 வரையான இளையோரும் அவர்களுக்கு பொறுப்பான மறைமாவட்ட இயக்குநர்களும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளும் கருத்துரைகளும் குழுச்செயற்பாடுகளும் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.

யாழ் மன்னார் மறைமாவட்டங்களை சேர்ந்த இளையோர்களும் இந்நிகழ்வில் பங்குகொண்டனர்.●

# துயர் பகிர்கின்றோம்...



யாழ். மறைமாவட்டக் குருவும் வன்னி கரிற்றாஸ் கியூடெக் நிறுவனத்தின் முன்நாள் இயக்குநருமாகிய அருட் தந்தை பீற்றர் அடிகள் கடந்த 19.07.2023 அன்று இறையடி சேர்ந்தார். அவரது ஆன்மா இறைவனில் இளைப் பாற மன்னார் மறைமாவட்டம் சார்பாக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.●

காலி மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி ரேமண்ட் விக்கிரமசிங்க ஆண்டகை அவர்களின் அன்புத் தாயார் **திருமதி.மார்கிரெட் தெரேஸ்** அவர்கள் கடந்த 29.07.2023 சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் இறைபதமடைந்தார். அவரது ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்னார் மறைமாவட்டம் சார்பாக பிரார்த்திக்கின்றோம்.●



# மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி
## புரட்டாதி 2023

02. குழந்தைஇயேசு திருவிழா - பறங்கிகமம் (அந்தோனியார்புரம்)
03. திருஇருதய ஆண்டவர் திருவிழா - சிதம்பரபுரம் (பெரியகோமரசன்குளம்)
05. புனித அன்னை திரேசா திருவிழா - புதிய கோயில்குளம், கந்தசாமிநகர் (செட்டிகுளம்)
08. புனித அடைக்கல அன்னை திருவிழா - நானாட்டான், இலுப்பைக்குளம், விடத்தல்தீவு, எழுத்தூர், காட்டாஸ்பத்திரி, சாளம்பன், மூங்கில்முறிச்சான், வேளாங்கண்ணிநகர், பறண்நட்டகல், நொச்சிக்குளம்.
- புனித வேளாங்கண்ணி திருவிழா - சாவற்கட்டு, கங்கன்குளம், கற்பகபுரம், மாறாவிலுப்பை (கனகராயன்குளம்), சவேரியார்புரம் (சிலாவத்துறை), மாவிலங்கேணி.
- புனித ஆரோக்கிய அன்னை திருவிழா - கருவேப்பங்குளம், மாந்தை
- புனித சதாசகாய அன்னை திருவிழா - தலைமன்னார் பியர்.
- புனித அங்காமத்து அன்னை திருவிழா - பெரிய குஞ்சுக்குளம்.
- புனித மடுமாதா திருவிழா - தங்கநகர் (வேப்பங்குளம்)
- புனித கப்பலேந்தி மாதா திருவிழா - கரிசல்
09. புனித வேளாங்கண்ணி திருவிழா - கட்டுக்கரைகுளம், இரணைஇலுப்பைக்குளம்
10. புனித வேளாங்கண்ணி திருவிழா - எல்லப்பர் மருதன்குளம் (கோமரசன்குளம்), தோணிக்கல், பாலியாறு (தேவன்பிட்டி).
- தேசிய இளையோர் ஞாயிறு
14. குருசுக்கோவில் திருவிழா - மன்னார், விடத்தல்தீவு
-- புனித பூண்டிமாதா திருவிழா - வெற்றிமக்கள் குடியிருப்பு (பேசாலை)
14. திருச்சிலுவை அருட்சகோதரிகள் விழா
15. புனித வியாகுல அன்னை திருவிழா - அடம்பன், சின்னவலயன்கட்டு
17. புனித வேளாங்கண்ணி திருவிழா - கருங்கண்டல் (காத்தான்குளம்)
- குழந்தை இயேசு திருவிழா - செம்மண்தீவு (முருங்கன்)
- புனித ஆரோக்கிய அன்னை திருவிழா - வவுனியா வைத்தியசாலை
22. புனித சிந்தாத்திரை அன்னை திருவிழா - பெரியமுறிப்பு
- அருட்பணி. பிரான்சிஸ் குலாஸ் அடிகளாரின் நினைவு தினம் (2011)
24. புனித சிந்தாத்திரை அன்னை திருவிழா - பாப்பாமோட்டை, மடுறோட்
- புனித வேளாங்கண்ணி திருவிழா - சன்னார் (விடத்தல்தீவு), ஓமந்தை
- தேசிய மறைக்கல்வி ஞாயிறு
26. புனித சகாய அன்னை திருவிழா - சாவற்கட்டு (பேராலயம்)
- புனித 6ம்சின்னப்பர் ஆலயம் - உதயபுரம் (சிறுத்தோப்பு)
- அருட்பணி. பாக்கிய றஞ்சித் அடிகளாரின் நினைவு தினம் (2007)
27. புனித சதாசகாய அன்னை திருவிழா - சூசைப்பிள்ளையார்குளம், (இறம்பைக்குளம்)
28. புனித வேளாங்கண்ணி அன்னை திருவிழா - தாமரைக்குளம்
29. புனித மிக்கேல் திருவிழா - தரவன்கோட்டை, தாலிக்குளம், பள்ளிமுனை.

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# செய்திகள்

## 'கிறிஸ்தவ கற்கைகளில் முதுமாணி' மாணவர்களின் கற்றல் பயணம்




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீடத்தினால் நிர்வகிக்கப்படும் 'கிறிஸ்தவ கற்கைகளில் முதுமாணி' கற்கை நெறியின் ஒரு பகுதியாக அதன் முதலாவது அணியினருக்கான கல்விச் சுற்றுலா கடந்த ஆடிமாதம் 8ஆம், 9ஆம் திகதிகளில் நடைபெற்றது. 'இலங்கைக் கிறிஸ்தவ வரலாற்றின் வேர்களைத் தேடி' என்ற மையப்பொருளில் இக்கற்றற் பயணம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

போர்த்துக்கேயர் காலத்திலிருந்தே இலங்கைக் கிறிஸ்தவத்தின் வேர்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் மன்னார் மாவட்டம் இக்களப்பயணத்துக்கு பொருத்தமான இடமாகத் தெரிவு செய்யப்பட்டது.

ஆடிமாதம் 8ஆம் திகதி காலை 6.30 மணிக்கு ஆரம்பமான இப்பயணத்தின் முதலாவது இலக்காகக் கிறிஸ்தவத் தொன்மையும், பக்திச் சிறப்பும் மிகுந்த மருதமடு அன்னை திருத்தலம் அமைந்திருந்தது. மாணவர்கள் திருத்தலத்தை ஆர்வத்தோடு அவதானித்து அதன்வரலாறு பற்றியும் அறிந்துகொண்டனர். மேலும் நாட்டின் இன ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் தமிழ் - சிங்கள இருமொழித் திருப்பலியிலும் கலந்து கொள்ளும் சந்தர்ப்பத்தைப் பெற்றனர். மருதமடு அன்னை யாத்திரைத்தலப் பரிபாலகர் அருட்திரு பெப்பி சோசை அவர்கள் இதற்குரிய ஒழுங்குகளை ஏற்படுத்தியிருந்தார்.

அங்கிருந்து பண்டிவிரிச்சான் பகுதிகளுக்குச் சென்ற பின்னர் போர்த்துக்கேயர் காலத்திலேயே முற்றிலும் கிறிஸ்தவத்தைத் தழுவிய பெருமைக்குரிய முத்தரிப்புத்துறை சென்று புராதன தொல்லியல் சின்னமான அல்லிராணிக் கோட்டையினையும் பார்வையிட்டனர். மாலையில் மன்னாரின் புராதன பாரிய கிறிஸ்தவக் குழுமமான வங்காலை புனித ஆனாள் பங்கைத் தரிசித்து அங்கு இனப்போர்க் காலத்தில் இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட அருட்தந்தை மேரி பஸ்டியன் அடிகளாருக்கும் அஞ்சலி செலுத்தினர். புனித ஆனாள் ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி மரிசால்பிள்ளை ஜெயபாலன் இதற்கான ஒழுங்குகளை மேற்பார்வை செய்திருந்தார்.

ஆடிமாதம் 9ஆம் திகதி காலை மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் விசேட திருப்பலி வழிபாடுகளில் பங்குபற்றினர். பின்னர் புனித செபஸ்தியார் பேராலய மறைக்கல்வி மாணவர்களுக்கான கருத்தமர்வு 'கிறிஸ்தவ கற்கைகளில் முதுமாணி' மாணவர்களினால் நிகழ்த்தப்பட்டது. 'ஒருங்கிணைந்த கல்வி' என்னும் மையக்கருத்தில் ஆன்மீகம் மற்றும் ஒழுக்கவாழ்வு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் உரையாடற் களமாக அந்நிகழ்வு அமைந்திருந்தது. இந்நிகழ்வுகள் அனைத்தும் பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி இராயப்பு அகஸ்தின் புஸ்பராஜா தலைமையில் ஒழுங்கமைக்கப் பட்டிருந்தன.

அதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் கிறிஸ்தவ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததான மறைச்சாட்சிகளின் வேர்களைக் கொண்ட தோட்ட வெளிப் பிரதேசத்தைத் தரிசித்தனர். அங்குள்ள மறைச்சாட்சிகளின் திருத்தலத்தில் 1544 ஆண்டு யாழ்ப்பாண இராட்சியத்தை ஆண்ட சங்கிலி மன்னனின் ஆட்சியில் நடைபெற்ற மாபெரும் இரத்த சாட்சிய நிகழ்வான மன்னார் மறைசாட்சியம் மற்றும் அது தொடர்பான ஆழமான விடயங்கள், வரலாற்றுத் தகவல்கள் எனப் பலவற்றையும் பெற்றுக்கொண்டனர். உணர்வுபூர்வ -மானதாக அமைந்திருந்த இந்நிகழ்வுகளை மன்னார் யோசவ்வாஸ் நகர்ப் பங்குத் தந்தை இராசநாயகம் அவர்கள் நெறிப்படுத்தினார். இதன்மூலம் மன்னார் மறைசாட்சிகளின் இரத்த சாட்சியம் இலங்கைக் கிறிஸ்தவர்களின் சமகாலக் கிறிஸ்தவ வாழ்வுக்கு விடுக்கும் சவால்களைப் புரிந்துகொள்ள உதவியது.

தொடர்ந்து தொன்மையான உடக்கு பாஸ் காட்சிகளை இன்றும் மேடையேற்றிவரும் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயம் சென்று அது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இதற்குப் பேசாலைப் பங்குத் தந்தை அருட்பணி அ. ஞானப்பிரகாசம் அடிகளார் சகல உதவிகளையும் புரிந்தார். பின்னர் தலைமன்னாருக்கும் செல்லும் வாய்ப்புக்கிட்டியது. இதற்கு தலைமன்னார் பங்குத்தந்தை அருட்பணி சந்தியோகு மாக்கஸ் சகல ஏற்பாடுகளையும் செய்து உதவினார். இறுதியாக மருதமடு அன்னையின் முதல் இருப்பிடமான மாதோட்டத்தில் அமைந்துள்ள மாந்தை லூர்து அன்னை ஆலயமும் தரிசிக்கப்பட்டது. ஒவ்வோர் இடத்திலும் கற்கைநெறி இணைப்பாளரும் பொறுப்பான பங்குத்தந்தையர்களும் போதிய தகவல்களையும், விளக்கங்களையும் வழங்கினர்.

கற்கை நெறியின் இணைப்பாளர் பேராசிரியர் அருட்பணி போல் றொகான் அடிகளாரின் ஏற்பாட்டிலும், விரிவுரையாளர்கள் அருட்திரு M.V.E இரவிச்சந்திரன், அடிகளார் திருமதி M.W. சுரேந்திரராஜ் ஆகியோரின் நெறிப்படுத்தல் மற்றும் வழிகாட்டுதலிலும் நடைபெற்ற இக்கற்றற் பயணமானது மாணவர்களுக்கு சிறந்ததொரு அனுபவக் கற்கையாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.


**தகவல்:- பேராசிரியர் அருட்பணி. போல் றொகான்**

## வவுனியா மறைக்கோட்ட அன்பிய பணியாளர்களுக்கான ஒருநாள் கருத்தமர்வு



கடந்த 29.07.2023 வவுனியா இறம்பைக்குள ஆலயத்தில் இடம் பெற்ற வவுனியா மறைக்கோட்ட அன்பிய பணியாளர்களுக்கான ஒருநாள் கருத்தமர்வு நிகழ்வில் அன்பிய பணியாளர்களுக்கு ஆன்மீக கருத்துரைகள், தலைமைத்துவ விளையாட்டுகள், மதிய உணவு பகிர்வு, கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. 85க்கு மேற்பட்ட ஊக்குவிப்பாளர் பயன்பெற்றனர். இது வவுனியா மறைக்கோட்டத்தில் அன்பிய பணியாளர்களை வலுப்படுத்தும் முயற்சியாக அன்பிய மத்திய நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டது.●

## சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் புதிய இயக்குநர் நியமனம்



சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் புதிய இயக்குநரான அருட்கலாநிதி. ஆ. யூட்ஸ் முரளிதரன் அவர்களை இப்பணியகத்தின் அருட்பணிப் பேரவை உறுப்பினர்கள் கடந்த 12.08.2023 சனிக்கிழமையன்று வரவேற்றனர். பணிமாற்றம் பெற்றுள்ள முன்னைய இயக்குநர் அருட்பணி சூ.ட. மில்ரன் லோகு அவர்களும் அருட்பணிப் பேரவை செயலாளர் திரு. அசோக் அவர்களும் புதிய இயக்குநருக்கு பூச்செண்டுகள் கொடுத்து வரவேற்பளித்தனர். இறைபணி தொடர வாழ்த்துகிறோம்.●

## பள்ளிமுனை பங்கின் புனித அந்தோனியார் ஆற்றுகை




புனித அந்தோனியாரின் வாழ்க்கை வரலாற்றின் சிறப்பம்சங்களை எடுத்துகூறும் வகையில் புனித அந்தோனியார் நாடகம் கடந்த 18, 19 ஆகிய இரு தினங்கள் பள்ளிமுனை புனித லூசியா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் புனித லூசியா கலைமன்ற நாடகக் கலைஞர்கள் பங்குபற்றி தங்களது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியிருந்தனர். இந்நிகழ்வின் முதலாம் நாள் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் தலைமைதாங்கி சிறப்பித்திருந்தார். இரண்டாம் நாள் நிகழ்வினை எமது மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் பெருமதிப்பிற்குரிய அருட்பணி. P. கிறிஸ்துநாயகம் அடிகளார் அவர்கள் தலைமைதாங்கி சிறப்பித்தார். ஏராளமான மக்கள் வருகைதந்து இந்நாடகத்தை கண்டுகளித்தனர். இந்நிகழ்வு மன்னார் கத்தோலிக்க ஊடகம் ஊடாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.●

## VAROD அமைப்பின் வருடாந்த விளையாட்டுப் போட்டி



மனித வாழ்க்கையானது அர்த்தமுள்ள முறையில் வாழப்பட வேண்டும் எனும் கூற்றினை பறைசாற்றும் விதத்தில் VAROD அமையமானது வலுக்குறைந்த மாற்றுத்திறனாளிகளை வல்லமையுள்ள மனிதர்களாக வலுப்படுத்தி வருவது யாவரும் அறிந்ததே. அம்மையத்தின் வலுவூட்டல் செயற்பாடுகளில் ஒன்றாக மாற்றுத் திறனாளிகளுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டி முக்கியமானதொரு இடத்தினை வகிப்பதுடன், இவ்வாறான போட்டி நிகழ்வுகளில் பங்குபெறும் மாற்றுத் திறனாளி வீர வீராங்கனைகளை தேசிய மட்டத்தில் நடைபெறும் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் பங்குபெறச் செய்து விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்க உந்துசக்தியாகவும் விளங்கு -கின்றது. அவ்வகையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களை உள்ளடக்கிய மாற்றுத்திறனாளிகளுக்கான அமையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வானது 01-07-2023 மற்றும் 02-07-2023 ஆகிய தினங்களில் மாற்றுத்திறனாளி -களுக்கென தீர்மானிக்கப்பட்ட 178 தனிப் போட்டிகளிலும் 14 திறந்த தனிப் போட்டிகளிலும் 15 குழுப்போட்டிகளிலும் மொத்தமாக 600 இற்கும் மேற்பட்டோரின் பங்கேற்புடன் சிறப்பாக நடந்தேறியதுடன் வெற்றி பெற்ற வீர வீராங்கனைகளுக்கான பதக்கங்கள், கேடயங்கள் மற்றும் பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்பட்டன.

இவ்விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளுடன் இரவு கலை கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெற தவறவில்லை.●

### பங்குத்தந்தையர்களுக்கு...

**தங்களது பங்குகளில் நடைபெறும் சிறப்பு வழிபாடுகள், திருவிழாக்கள் தொடர்பான விடயங்களை மன்னாவில் பிரசுரிக்கும் பொருட்டு மன்னா மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

## சிறப்புப் பக்கம்

# இயற்கையுடன் இளையோர்

MISEREOR
IHR HILFSWERK



இயற்கையை நேசிக்கவும், இயற்கையுடன் இணைந்து வாழவும் தூண்டும் நோக்குடன் இயற்கைச் சாகச வனப்பகுதிக்கு கறிராஸ் வாழ்வுதயம் நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பிரிவினால் 45 இளைஞர்களும், யுவதிகளும் அழைத்துச் செல்லப்பட்டனர். சவுத்பார், வேப்பங்குளம், காத்தான் குளம், மடுறோட் ஆகிய இலக்குக் கிராமங்களைச் சேர்ந்த இளையோர்கள் இரண்டுநாள் களப்பயணமாக இதனை மேற்கொண்டிருந்தனர். 'சோ சாகச வனப்பகுதியில்' பல்வேறு பட்ட செயற்பாடுகளில் ஈடுபட்ட இளையோர் இயற்கையின் மகத்துவத்தையும் அதன் இணைந்த வாழ்வையும் அனுபவ ரீதியாகப் பெற்றுக்கொண்டார்கள்.

அத்துடன், பறவைகள், விலங்குகள், மரம் செடி கொடி என்பவற்றின் இயல்பு வாழ்வு, இயற்கையின் அமைப்பு, அதன் அழகு ஆகியவற்றை இரசிக்கவும், மகிழவும் பழகிக்கொள்ளும் இளையோர் அவற்றின் இருத்தலுக்கும், வாழ்தலுக்கும் மனிதர்களார் ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல்களில் இருந்தும் காப்பாற்றும் பொறுப்புடையவர்கள் எனும் கருத்துக்களை உள்ளடக்கியதாக மடு வனவிலங்கு அதிகாரி திருவாளர் ஜோதி அவர்களினால் கருத்தமர்வுகள் நடாத்தப்பட்டன.

மலை ஏறுதல், குழு விளையாட்டுக்கள், குறி பார்த்துச் சுடுதல், குறிபார்த்து அம்பு எய்தல், ஆகாயக் கம்பியில் தொங்கிச் செல்தல், ஆற்றில் படகோட்டுதல், பூதப்பாதங்களில் நடத்தல், ஒளி இரவு, ஆடல்பாடல் எனப் பல்வேறுபட்ட நிகழ்வுகள் ஊடாக இயற்கையின் அழகையும், இருத்தலையும், வனப்பையும் அனுபவித்து மகிழ்ந்தார்கள். அனுபவத்தின் ஊடாக இயற்கையை நேசிக்கவும், அன்பு செய்யவும் தூண்டப்பட்டுள்ளதை இளையோர் மகிழ்வுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

இவ் அனுபவத்தைப் பற்றி 18 வயதுகள் நிரம்பிய செல்வி. பாத்துமா நப்றா இவ்வாறு பகிர்ந்து கொள்கின்றார். 'இயற்கையைப் பாதுகாத்து அதன் அழகையும், வனப்பையும் நாம் எவ்வாறு மகிழ்ச்சியாக பல்வேறு விதங்களில் அனுபவித்து இன்புற முடியும் எனக்கற்றுக்கொண்டேன். இரண்டு நாட்களும் எவ்வாறு கடந்துபோனது என்று அறியவும்,



உணரவும் முடியாதளவிற்கு இயற்கை எங்களை வியப்புறச் செய்தது. இவ் இயற்கையை அழிப்பதும், அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குவதும் மனித தவறு என உணருகின்றேன். ஏன் வாழ்வில் இந்த இயற்கையைப் பாதுகாத்து அதன் பயன்களை அனுபவிக்க முயலவேண்டும் எனும் பாடத்தைக் கற்றுத் தந்துள்ளது இந்த நாட்கள் என்கிறார்.

**இளையோர் சூழல் பாதுகாப்புக் குழுக்கள் உருவாக்கம்**

எமது கிராமங்களில் இயற்கைக்கு எதிரான செயற்பாடுகளும், பல்வேறுபட்ட அழிவு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையினால் காத்தான் குளம் கிராமத்தில் உள்ள இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும், இயற்கையினை மேம்படுத்தவும் வேண்டியுள்ள தேவைப்பாட்டினை மக்கள் உணர்வதற்கான விழிப்புணர்வு நிகழ்வுகள் காத்தான்குளம் கிராமத்தின் இளையோருக்கும், சிறுவர்களுக்கும் வழங்கப்பட்டது.

எமது முன்னோர்களிடமிருந்து நாம் இந்த இயற்கை எனும் சொத்தினை கடனாய்ப் பெற்றுள்ளோம். இவற்றைப் பாதுகாத்து எமது நாளைய தலைமுறையினரிடம் கையளிக்க வேண்டியது எம் கடமையாகும். இந்த நோக்கத்துடன் காத்தான் குளம் கிராமத்தில் பங்குத்தந்தை அருட்பணி தவறாஜ் அடிகளாரின் ஒத்துழைப்புடனும், வழிகாட்டலுடனும் 30 இளைஞர் யுவதிகளைக் கொண்ட இளையோர் சூழல் பாதுகாப்புக் குழுவினையும், 25 சிறுவர்களைக் கொண்ட சிறுவர் சூழல் பாதுகாப்புக் குழுவினையும் வாழ்வுதயம் உருவாக்கியுள்ளது.

பின்வரும் விடயங்கள் தங்களின் முதன்மைச் செயற்பாடுகளாக தீர்மானிக்கப்பட்டுள்ளன:

1. கிராமத்தின் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தலும், தூய்மையாக்கலும்
2. மரங்களை நடுதலும் பராமரித்தலும்
3. இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூட்டங்கள் நடாத்துதல்
4. இயற்கையைநேசச் சுற்றுலாக்களை மேற்கொள்ளுதல்
5. மாவட்ட ரீதியாக வாழ்வுதயம் முன்னெடுக்கும் சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குதல்.

## இம்மாத புனிதர்கள்

### புனித அல்போன்ஸ் லிகோரி ஓகஸ்ட் 01




புனித அல்போன்ஸ் லிகோரி, இத்தாலி நாட்டின் நெப்பிள்ஸ் நகரில் 1696இல் பிறந்தார். தனது 16ஆம் வயதிலேயே அரசியல் சட்டம், திருச்சபைச் சட்டம் இவற்றில் முனைவர் பட்டம் பெற்று விட்டார். சிறிது காலம் வழக்குரைஞராகப் பணிபுரிந்தார். உலகத்தைத் துறந்து குருவாகத் தீர்மானித்தார். மிக ஏழையாக இருந்தவர்கள் மத்தியில் நற்செய்திப் பணி புரிந்து வந்த குருக்கள் சிலருடன் சேர்ந்து உழைக்கலானார். விரைவாக இவரும் திருநிலைப்படுத்தப் பட்டார். நம் அயலாரின் ஆன்ம நலனுக்காக உழைப்பதில்தான் உண்மையான அன்பு அடங்கியுள்ளது என்பது இவரின் கருத்து. ஏழைகளுக்குத் தொண்டு செய்யும் நோக்குடன் புனித அல்போன்சஸ் லிகோரி 1732ஆம் ஆண்டு இரட்சகர் சபையைத் தோற்றுவித்தார்.

1752இல் எழுத்துப் பணியைத் தொடங்கினார். "அறநெறி இறையியல்" இவர் எழுதியுள்ள நூல்களில் மிகச் சிறப்பு வாய்ந்தது. குருமாணவர்களுக்கு பாடநூலாகப் பயன்பட்டு வருகிறது. அன்னை மரியாவிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்த இவர் "மரியாவின் பெருமை" என்னும் நூலை இயற்றியுள்ளார். "சிலுவைப்பாதை", "திவ்விய நற்கருணை சந்திப்பு" போன்றவை இவர் இயற்றிய வேறு இரண்டு சிறந்த நூல்கள். 1762இல் ஆயராக நியமனம் பெற்றார். குருமாணவர் இல்லங்களையும், துறவற இல்லங்களையும் சீர்படுத்தினார்.

"அனுமதிக்கப்பட்ட சுகங்கள் அனைத்தையும் அனுபவிக்க விரும்புகிறவன் விரைவில் விலக்கப்பட்ட இன்பங்களையும் தேடத் தொடங்குவான்" என்று இப்புனிதர் கூறியுள்ளார். பிறருடைய உள்ளுணர்வுகளை அறியும் திறமையும், குணமளிக்கும் வல்லமையும், எதிர்காலத்தில் நிகழ விருப்பதை முன்னறிவிக்கும் திறனும் இவருக்கு இருந்தது. தம் கடும் தவமுயற்சிகளாலும், கடின உழைப்பினாலும் பலவீனமடைந்திருந்த இவர் பலவித நோய்களுக்கு உள்ளானார். பக்கவாதத்தினால் உடலின் ஒரு பக்கம் முழுவதும் செயலிழந்து விட்டது. ஆயினும் 79வது வயதில்தான் ஆயர் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டார். 1787ஆம் ஆண்டு தனது 91வது வயதில் இறையடி சேர்ந்தார்.

### புனித லோரன்ஸ் ஆகஸ்ட் 10



திருத்தொண்டர் லோரன்ஸ் திருத்தந்தை 2ம் சிக்ஸ்டிசடம் திருத் தொண்டராகப் பணிபுரிந்தார். திருச்சபையின் சொத்துக்களைப் பாதுகாத்து, வரும் பணத்திலிருந்து ஏழைகளுக்கு வழங்குவது இவரது பணிகளில் ஒன்றாகும். வேதகலகம் தோன்றியது. திருத்தந்தையைப் பிடித்துக் கொலைக்களத்திற்கு கொண்டு போனார்கள். லோரன்ஸ் அழுது கொண்டு பின் சென்றார். திருத்தந்தை திருச்சபையின் செல்வங்களை ஏழைகளுக்கு வழங்கும்படி அவருக்கு உத்தரவிட்டார். ஏராளமாக வழங்கும்படி லோரன்ஸ் திருப்பாத்திரங் களையும் விற்றுக்கொடுத்தார்.

உரோமை அதிகாரி ஒருவன் லோரன்ஸை நோக்கி, "திருச்சபையின் திரவியங்களை எல்லாம் எனக்குக் காட்டு" என்றான். மூன்று நாள்களுக்குள் அவ்விதம் செய்வதாக லோரன்ஸ் வாக்களித்தார். ஆனால் ஊனமுற்ற ஏழைகளுக்குக் கோவில் உடைமைகளைப் பகிர்ந்து அளித்து விட்டு, அவர்களையே கூட்டமாக சேர்த்துக்கொண்டு அரசனை அணுகி, "இதோ, இவர்கள்தான் திருச்சபையின் திரவியங்கள்" என்றார். மன்னன் சினங்கொண்டான். புனிதரைப் பிடித்து இரும்புக் கட்டிலில் கிடத்தி அதன் அடியில் நெருப்பு மூட்டும்படி கட்டளை இட்டான். இவரோ சுடர்விட்டு எரிந்த நெருப்பின் கொடுமையைப் பொறுத்துக்கொண்டே மகிழ்வாய் இறைவனைப் புகழ்ந்தார். கடைசி மூச்சு விடும்வரை செபித்து உயிர் துறந்தார். இவரது சாவைக்கண்ட பல அவிசுவாசிகளான அதிகாரிகள் கிறித்தவர்களானார்கள். புனித லோரன்சின் வாழ்வு கீழ்க்கண்ட இறைவார்த்தைகளை நம் சிந்தனைக்குக் கொண்டு வரட்டும். "சிறியவற்றில் நம்பிக்கைக்குரியவனாய் இருந்தாய், ஆதலால் உன்னைப் பெரியவற்றிற்கு அதிகாரியாக்குவேன்" (மத் 25:21).

### புனித ஜான் மரியவியான்னி ஓகஸ்ட் 04



புனிதர் என்ற புகழ் சிலருக்கத்தான் பொருத்தமாக அமையும். அந்தச் சிறப்பு புனிதரான ஜான் மரிய வியன்னியின் வாழ்வில் பொருந்தி நிற்கிறது. புனித ஜான் மரிய வியான்னிக்கு உலகம் சார்ந்த அறிவு குறைவு என்று அறியப்பட்டாலும், மற்ற குருக்களால் தனிமைப்படுத்தப்பட்டாலும் கடவுளோடு மட்டும் தனித்திருப்பது புனிதம், இறைவனோடு இணைந்திருப்பது ஞானம் என்று உலகிற்கு உறுதியாய் அவரின் வாழ்வு வெளிப்படுத்தியது. பிரான்சு நாட்டில் லைனஸ் என்ற நகருக்கு அருகில் உள்ள டார்டில்லி என்ற கிராமத்தில் 1786இல் வியான்னி பிறந்தார். பிரான்சு புரட்சி ஏற்பட்ட நேரத்தில் கிறிஸ்து கொள்கைகளை வெளிப்படையாக வாழ இயலாத சூழ்நிலை. இந்தச் சமயத்தில் புனிதரின் பெற்றோர்கள் கிறிஸ்துவத்தை மறைமுகமாகப் பின்பற்றி வந்தார்கள். அனுபவத்தில் அறிந்த கிறிஸ்துவத்தின் பெருமையை உணர்ந்தவராய் புனித வியான்னி குருவாக வாழ வேண்டும் எனப் புறப்பட்டவருக்கு ஏராளமான தடங்கல்கள்.

பெற்றோரின் விருப்பமின்மை, இராணுவ சேவை என்ற அரசுச் சட்டம் போன்றவை தடையாக அமைந்தது. அதனைக் கடந்து குருமடத்தில் சேர்ந்த புனிதருக்குப் இறையியல் மறை உண்மைகளை புரிந்து கொள்வதும், இலத்தீன் மொழியைக் கற்றுக் கொள்வதும் மிகப் பெரிய போராட்டமாக மாறியது. இதனால் குருவாக வேண்டிய நேரத்திலும் குருப்பட்டம் தள்ளி வைக்கப்பட்டது. இச்சவாலை சாதனையாகத் தன் பக்தியிலும், நம்பிக்கையிலும் வெளிப் படுத்தியதால் குருவாக உயர்த்தப்பட்டார். இவரது திறமை குறைவாக மதிப்பிடப்பட்டதனால் ஒதுக்குப்புறமான சிறிய பங்காகிய அர்ஸ் கிராமத்திற்கு வியான்னி அனுப்பட்டார். வெறும் அடையாள கிறிஸ்துவ மக்களாக எந்தத் தெய்வ நம்பிக்கையும் இல்லாத கிறிஸ்துவமக்கள் மத்தியில் பணியாற்றத் தொடங்கினார். தனது செப வாழ்வாலும், தவ முயற்சிகளினாலும் மக்களின் மத்தியில் நம்பிக்கையை வென்றெடுத்தார். மனமாற்றத்தினால் வாழ்வு பெற முடியும் என்ற நம்பிக்கையை மக்களின் உள்ளங்களில் பதித்தார். இதன் மூலமாகப் பல்வேறு மக்கள் ஒப்புரவு சாதனத்திற்காக அர்ஸ் நகரை நோக்கிப் படையெடுத்தனர். படிப்படியாக உண்மையான மனமாற்றத்தின் தந்தையாக மக்கள் மத்தியில் உயர்ந்து நின்றார். இதனால் ஒவ்வொரு நாளும் 16 மணிநேரம் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கும் குருவாக வாழ்ந்து காட்டினார். புனிதரின் வாழ்வு குருக்களுக்குச் சிறந்த ஞானமாகவும் பாடமாகவும் அமையட்டும்.

### அசிசியின் புனித கிளாரா ஆகஸ்ட் 11



இவர் இத்தாலியில் உள்ள அசிசியில் 1194ஆம் ஆண்டு பிறந்தார். இளம் வயதிலிருந்தே தன்னை கடவுளுக்கு அர்ப்பணிக்க விரும்பினார். புனித அசிசி பிரான்சிஸ் மறையுரைகள் கேட்டு அவரது போதனைகளைக் கேட்ட கிளாரா துறவியாக வேண்டுமென்று தனது 18வது வயதில் தீர்மானித்து குருத்து ஞாயிறு இரவில் பெற்றோருக்குத் தெரியாமல் புனித பிரான்சிஸ் அவர்களின் இல்லம் சென்று அடைக்கலம் புகுந்தார். அவர் இவருக்கு துறவற உடை அளித்தார்.

இவரைக் கொண்டு புனித பிரான்சிஸ் ஒரு புதிய கன்னியர் சபையைத் தொடங்கினார். இதுவரை பெண்கள் அனுசரிக்காத தவ முயற்சிகளையெல்லாம் இந்தச் சபையினர் அனுசரித்தனர். ஒவ்வொரு நாளும் உபவாசம் இருந்தனர். ஒருமுறை வேத விரோதிகளான சரசேனியரின் படை அசிசி நகரிலிருந்து வந்து இவர் இருந்த மடத்தை கொள்ளையடிக்க படையெடுத்து வந்தது. திவ்விய நற்கருணை இருக்கும் பாத்திரத்தை தனது மடத்தின் வாசற் படியில் வைக்கச் சொல்லி அதன்முன் முழந்தாள் படியிட்டு "ஆண்டவரே, உம்முடைய ஊழியர்களாகிய நாங்கள் அவிசுவாசிகளான இவர்களது கைகளில் அகப்பட்டு அழிவது உமது விருப்பமா?" என்று மன்றாடினார். இவரது மன்றாட்டுக்குக் கடவுள் செவிசாய்த்தார். எதிரிகள் ஒருவித அச்சத்தால் பீடிக்கப்பட்டு ஓட்டம் பிடித்தனர். புனித கிளாரா நோய்வாய்ப்பட்டுக் கிடந்த 28 ஆண்டு காலமும் திருவுணவு மட்டுமே ஒரே உணவாக இருந்தது. தனது 59வது வயதில் புனிதவதியாய் விண்ணகம் சேர்ந்தார்.

# கவிதைக்களம்

## மருதமடு திருத்தாயே! மாற்றமொன்று காட்டிடம்மா..!

மருதமடு திருத்தாயே! மாதவளே – உம்
மாந்தரின் அவலக்குரல் அதிகரித்துச் செல்லுதம்மா!
மனமிரங்கி எம் குரலை மாண்புடனே ஏற்றிடய்யா!
மானிலத்தில் நாம் வாழ நல்வழி காட்டிடம்மா!

வீதியிலே உம் மாந்தர் விண்ணுலகு செல்கின்றாரே...
பாதி வழி மறித்து பலவந்தம் பண்ணுகிறாரே...
நாதியற்ற மனித இனம் நடுத்தெருவில் நிற்குதய்யா...
ஆதிஅந்தம் புரியாமல் அலறி துடிக்குதம்மா...!

கதிகலங்கி நிற்போரின் கண்ணீரை துடைத்திடம்மா..!
மதி இழந்த மானிடர்க்கு மாற்றமொன்று காட்டிடம்மா..!
சதி வேலை செய்வோரை சந்நிதியில் நிறுத்திடம்மா..!
விதி என்று விட்டிடாமல் விடிவொன்று காட்டிடம்மா..!

சோதனையும் வேதனையும் சூழ்ந்தெம்மில் நிற்குதம்மா..!
சூதாட்டம் மண்ணிலே நின்று நிலைக்குதம்மா..!
ஆதாரம் இன்றி மனித இனம் அழியுதம்மா..!
வேதம் சொன்ன வழிமறந்து விபரீதம் நடக்குதம்மா..!

வாள்வெட்டும், கடத்தல்களும் கடுமையானதம்மா..!
சூழுரைத்து மனித உயிர் சுக்கு நூறாகுதம்மா..!
ஆளுவோரும், விழுவோரும் அதிகமாகுதம்மா..!
தொழுதும்மை கேட்கின்றோம் பதில் ஒன்று கூறிடம்மா..!

மடுத்தாயே.. மண்ணிலே மலராக பூத்திடம்மா..!
மாண்டவர் அனைவரையும் விண்ணிலே ஏற்றிடம்மா..!
காடுமலையாறு கண்டும்மை தொழுகின்றோம்!
நாட்டிலே வெளிச்சமொன்றை நல்கிட வேண்டும்மம்மா..!

**அ. ஜஸ்மின் ஷறோன்**
**ஆவணம், நானாட்டான்.**

## அருள் தருவாய் ஆண்டவரே

உன்னத இறைமகனின் பணி செய்ய
உலகிற்கு அழைத்த உன்னதரே எம் ஆண்டவரே!
உன் திருவடியில் பணிந்தேன்
உன் பணி செய்ய அருள் ஆசீர் தருவாயே! ஆண்டவரே!

அன்பு இறைவனில் சங்கமித்து அவனியை அலங்கரித்து
அதிகாரம் போட்டு ஆணவத்தில்
பணி தொடராது அமைதியின் தூதுவராய்
அன்பினில் அணிசெய்து பணி செய்ய
அருள் தருவாய் ஆண்டவரே!



அவமானங்கள் பல பட்டாலும்
அலை அலையாய் மக்கள் அங்கலாய்புத் தந்தாலும்
ஆயனின் மந்தையாய் அவர் பணி தொடர்ந்திட
அருள் தருவாய் ஆண்டவரே!

மனக்காயம் மாற்றிடும் மருந்தாக நீ இருக்க
மனநோயால் வாடினாலும் தேற்றிட நீ இருக்க
அகிலத்தில் நற்செய்தி பணி தொடர தடையேதும் உண்டோ?

உன்னத செபமாலை தாயின்
உத்தம புத்திரரே. உம் பணிதொடர
ஞானத்தை தந்து. ஆசீர் அளிப்பாயே ஆண்டவரே!

P. **அன்ரனிகுரூஸ் சரன்சலாமேரி,**
**இல – 36, புனித அன்னை தெரேசா ஆலயம்,**
**துட்டுவாகை.**

## மனசு

உள்ளே அழுவதினால் அதன் சத்தம்
வெளியே கேட்பதில்லை
முகத்தில் நன்றாய் சிரித்து கொள்வதினால்
யாருக்கும் தெரிவதில்லை
விட்டுகொடுத்து வாழ்வதினால் அடிமையாகி விட்டோம்
நம்மை பாடு படுத்துபவர்களுக்கு எதுவும் புரிவதில்லை

கூட இருந்து ஏமாத்துபவர்களுக்கு நம்பிக்கை
வைத்தவர்களுக்கும் அர்த்தம் கிடைப்பதில்லை
நெஞ்சினிலே துரோகத்தையும் வைத்து
நல்ல உண்மையான அன்பை புரிவதில்லை
வீண் பலிகளை ஏற்க தொடங்கினால்
மேலும் துயர் வந்து சேரும்.

மனிதர்களை பிறந்தால் எல்லா வலிகளையும்
தாங்க துணிய வேண்டும் சந்தோசமாக
இருப்பது போல் நடித்து நடித்து
போலியாக நடிப்பதை தவிர வேறு வழியில்லை
எமது உண்மையான மனதினை
புரிந்து கொள்பவன் தான் மனிதன்

**J.யோண் பெகியோ (தரம் -5)**
**சுண்டிக்குளி, முருங்கன்.**

## மருதமடு செபமாலை நாயகியே



மருதமடு செபமாலை நாயகியே
மாசில்லாத இருதய நாயகியே
மனுக்குலத்தவரின் அடைக்கல நாயகியே
உம்மை வாழ்த்தி போற்றுகின்றேன் தாயே

பாவிகளின் ஈடேற்றமாகிய பரம நாயகியே
பாவிகள் எம்மேல் இரக்கம் வையும்
அழுகின்றவர்களின் அணைக்கின்ற பரம நாயகியே
அழுகின்ற எம்மேல் கொஞ்சம் கருணை காட்டும் தாயே

நம்பினோரை கைவிடாத பரம நாயகியே
உம்மிலே எம் முழு நம்பிக்கையையும்
வைத்துள்ளோம் தாயே
கொஞ்சம் இறைவனிடம் எம் மன்றாட்டை
கூறியருளும் அன்புத் தாயே

**யே. தர்சினி**
**திருநாவற்குளம், வவுனியா.**

## இளைஞனே விழித்திடு

நல்ல எதிர் காலம் உனக்குண்டு
எழுந்திடு புறப்படு நண்பா
பொன்னான நேரத்தை கண்ணாக மதித்திடு
பொல்லார் சொல் கேட்டு பின்னே நீ செல்லாதே
தாய் தந்தையை மதித்து நட
தலைக்கனத்தை நீ விட்டு விடு
நேரிய வழியில் சென்றிடு
நேர்மை நீதியை வென்றிடு
கடமையில் நீ கருத்தாயிரு
கண்ணியத்துடன் வாழ பழகு
செய்யும் தொழிலை மதித்திடு
தெய்வத்தை நீ என்றும் தொழுதிடு
அச்சத்தை விட்டொழித்திடு
அஞ்சாமையை நீ அணிந்திடு
உண்மையை உரைத்திடு
வாய்மையை உரைத்திடு
வாய்மையை அகற்றிடு
சுற்றம் சூழ வாழ்ந்திடு
சுயநலத்தை விட்டுவிடு



**திருமதி. யேசுதாசன் யூக்கறிஸ்ரா ஐடா**
**புத்திரகண்டான்**

## மனித வாழ்வின் குறிக்கோள்

மனித வாழ்வு மாண்பும் மகத்துவமும் நிறைந்தது
மற்று உயிர்களிடம் இச்சிறப்பு ஏதுமில்லை
கனிதரும் மரங்கள் நன்றியை எதிர்பார்ப்பதில்லை
தாயைவிடச் சிறந்த தியாகம் தரணியிலில்லை
தனியாக மனிதன் வாழ்வது சிறப்புடைத்தன்று
சமூகமாய் வாழ்ந்திடவே இறைவன் படைத்துள்ளான்
புனிதமானது கடவுள் இணைத்த திருமண வாழ்வு
பணமும் அந்தஸ்தும் ஏற்படுத்தும் பிரிவினையை

உண்மையாய் நேர்மையாய் வாழ்வது கடினமானது
உன்னை உண்மையாய் மாற்றிக்கொள் உறுதிபெறுவாய்
கண்கள் பார்க்காவிட்டால் காட்சிகளால் பயனில்லை
கடவுள் அனைத்தையும் கண்காணித்து கொண்டேயிருக்கிறார்
பொன் பொருளைச் சேர்ப்பதில் பயனேதுமில்லை
போகும்போது எதனையும் எடுத்துச்செல்ல முடியாது
மண்ணில் நிரந்தரமாகிட முடியாது மறுவாழ்வு கண்டு
நேர்மை உண்மையாய் வாழ்பவரே மறுவாழ்வைக் காண்பர்

நிலைவாழ்வை அடைவதே மனிதனின் குறிக்கோள்
நிலையில்லாச் செல்வங்கள் நிம்மதியைத் தந்திடாது
வலைவிரித்து வீழ்த்திடச் செய்திடும் உலகம்
வாழ்வதும் வீழ்வதும் நம் கையில் தானுள்ளது
தலைவிதியென்று சாத்தான் ஓதிடுவான் மந்திரம்
விடா முயற்சியினால் வெற்றி திருவினையாகும்
மலைகூடப் பெயர்ந்து நகரும் கடுகளவு விசுவாசமிருந்தால்
மலைப்பொழிவைக் கடைப்பிடி நிலைவாழ்வு பரிசாகும்

**அன்ரனி பீற்றர் அபீரராஜன்**
**(P.T.O) யாழ்ப்பாணம்.**

### ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களைச் சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்
**- மன்னா நிர்வாகம் -**

## மடுப்பதியில் வீற்றிருக்கும் மாமரித்தாயே!

கானகத்தில் வீற்றிருந்து கண்ணீர் கவலை துடைக்கும் தாயே
காசினியில் உம் புகழ் காற்றாய் பறக்குதம்மா
காலமெல்லாம் மக்கள் உம்மை தேடி வருகின்றார்கள் அம்மா
கானக்குயிலாக கவிபாடும் கானகத் தாயே!

வருடாவருடம் கோடி பக்தர்கள் விழாக்காண
வருகை தருகிறார்கள் அம்மா!
வந்தவர்களுக்கு வரமளித்து வழியனுப்பும் அன்புத்தாயே!
வலி வாதையோடு வந்தர்வர்களுக்கு சுகமளிக்கும் தாயே!
வசதி வசதியற்ற வேறுபாடின்றி வாரியணைக்கும் தாயே!

அலை அலையாய் அண்டி வருவோருக்கு
அருள்பாலிக்கும் தாயே!
அச்சமின்றி வந்து சரணடையும் மாந்தருக்கு
ஆறுதல் அளிக்கும் தாயே!
அன்புருகி அவலம் நீக்கும் அன்புத்தாயே!
அன்னையின் மடியில் தலைசாய்க்கும் அடியாருக்கு
துன்பம் நீக்கி இன்பம் தரும் தாயே!

இன்னலுடன் வருவோருக்கு இகபரமளிக்கும் தாயே!
இல்லையென்று சொல்லாது அள்ளி வழங்கும் தாயே!
இன்முகத்துடன் என்றும் துலங்கும் மாமரித்தாயே!
இலங்கைத் திருநாட்டிற்கு எழில் சேர்க்கும் இன்பத்தாயே!

மன்னார் மாவட்டத்திற்கு மாண்பு மதிப்பு
சேர்க்கும் அன்புத்தாயே!
மறைசாட்சிகள் மரித்த மாநகரில்
மங்கா ஒளியுடன் மிளிரும் தாயே!
மனமுருகி மன்றாடி கேட்கும் வரங்களை
தவறாதளிக்கும் தாயே!
மரியே மரியே வாழ்க வளமுடன் தாயே!

**ஜெ. சுஸ்மிதா**
**சூரியகட்டைக்காடு, நானாட்டான்.**

## மலையகம்

தெரிகின்ற தூரமும் தொடுகின்ற வானமும்
காண விரைகின்றது. என் மனம்
பணிந்து வந்த அந்த வானத்தை
நிறைந்து பார்க்க கரைகின்றேன்.
என் கற்பனை வளம் முழுவதையும்
கனப் பொழுதில் அழைக்கின்றேன்.

சுற்றிச் சூழல்கின்ற என் விழிகளை
ஓரிடத்தில் தடுத்து நிறுத்த முடியவில்லை
பசுமைச் சாயம் கவிழ்ந்த முகடுகள்
அதில் சூடை சுமந்து குனிந்த முக்காட்டுப் பெண்கள்
வளைந்து நெளிந்த பாதைகளில்
ஊர்ந்து விரைகின்ற வாகனங்கள்

தார்ப்பாம்புகள் நெளிகின்ற வனப்பு வியப்புத்தான்
பிரமிட் கூம்புகளாய்த் தெரிகின்ற
போதைச் செடிகளில் கொழுந்து
பறிக்கின்ற விரல்களின் ஜாலமும்
சிறப்புத்தான்

பச்சை போர்த்திய பர்வதங்கள்
இச்சையூட்டும் செழுமரங்கள்
பண்ணைமுழுவதும் பசுயினங்கள்
பஞ்சுத்திண்ணை போல புல் நிலங்கள்
அழகழகாய் மலரினங்கள் அடுக்கடுக்காய்
விளை நிலங்கள்
காண அலை அலையாய் வெள்ளையர்கள்
துள்ளி ஓடும் மான் போல்
அணி வகுக்கும் பள்ளியர்கள்

உறைந்த குளிரில் ஊரே உறங்கும்
நிறைந்த இரவில் பனியே இறங்கும்
அனிச்ச மலராய் உதயம் இருக்கும்
பனித்த துளி மேல் இதயம் பறக்கும்
தலையருவி விளையருவி உடும்புபிடிக்க
தாய் நதியாய் மகாவலி உருப்பெருக்க
கடல் மீது கொண்ட காதல் பயணத்தில்
எத்தனை பெயர்களில்
நீர் வீழ்ச்சி அவதாரம்

மலை முட்ட பனி மூட்டம்
முகில் முட்ட மழைகிட்டும்
தலை முட்டி துளி சொட்டும்
கலை கட்டும் திசை எட்டும்
இது எழில் கொட்டும்
நம் மலையகமே!



சிறப்புப் பக்கம்

# அன்பிய வளர்ச்சியில் பணியாளரின் பங்கு

திருமதி. சீ.எஸ்.எஸ்.குரூஸ் (மத்திய குழு),
பெரியபண்டிவிரிச்சான் பங்கு.

“அன்பியம்” என்பது ஓர் குட்டித்திருச்சபை ஆகும். சிறுசிறு குழுக்கள் மத்தியில் இறைவார்த்தை வழியாக இறை அன்பை பிரதிபலிக்கச் செய்வதும் இன, சாதி வேறுபாடுகளின்றி இறையரசைக் கட்டியெழுப்புவதே இதன் நோக்கமாகும்.

ஆதித் திருஅவையின் பண்புகளான நட்புறவு, பகிர்ந்து உண்ணல், கூடிசெபித்தல், இறைவேண்டல், உடைமைப் பகிர்வு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அன்பியங்கள் செயற்பட்டு வருகின்றன். (தி.ப 2:42-47)

கூட்டொருங்கிய திருஅவைப் பயணத்திலே ஒன்றிப்பு, பங்கேற்றல், பணி எனும் கருப்பொருளிலே இறைவனால் அன்பிய பணிக்கென தேர்ந்துகொள்ளப்பட்ட நாம் ஒவ்வொருவரும் இறைசமூகங்கள் மத்தியில் எமது முன் மாதிரிகையான செயற்பாடுகள் மூலமாகவும் அன்பு, இரக்கம், தியாகம், புரிந்துணர்வு, வெளிப்படைத்தன்மை, உண்மை, நேர்மை, சமத்துவம், ஒழுக்கம், ஆரோக்கியமான தொடர்பாடல், ஏற்றுக்கொள்ளல், மன்னித்தல் போன்ற நற்பண்புகளுடன் பயணிக்கும் போது எமது பணியை இலகுவாக முன்னெடுத்துச் செல்ல முடியும்.

அன்பிய இல்லங்களிலும், ஆலய வழிபாடுகளிலும் வெறுமனே வழிபாடுகளை மேற்கொள்வது மட்டுமன்றி அதற்கு இணையாக ஒவ்வொரு அன்பியங்களிற்கிடையிலும் குடும்ப ஒற்றுமைக்காகவும் செபிக்க வேண்டும். இயேசுவின் அன்பும் இவ்வாறு அமைந்தது. (எபே 4:14-15)

மேலும் இறையன்புச் சமூகப் பணியிலே இறப்புகள், இழப்புகள் எதிர்கொண்டோர், தீராத நோயினால் துன்புறுவோர் சந்திப்பு, அருட்சாதனங்களைப் பெற இயலாதவர்கள், பெறத் தவறியோர்களையும் இனங்கண்டு பெற்றுக்கொள்ள உதவுதல் (நற்கருணை, நோயிற்பூசுதல், உறுதிபூசுதல்) அத்தோடு அன்பியங்களில் உதவி தேவைப்படுகின்ற குடும்பங்களை இனங்கண்டு மருத்துவம் கல்வி போன்றவற்றிற்கு அன்பிய ரீதியாகவும், தொண்டு நிறுவனங்கள் மூலமும் தொடர்புகளை ஏற்படுத்தி பெற்று கொடுத்து உதவ முன்வருதல், தனிப்பட்ட உதவிகளையும் மேற்கொள்வதால் (மத் 6:3-4) இறைவனின் கைமாறு எமக்கு மிகுதி கிடைக்கும். உடல், உள, ஆன்மீக, உணர்வு ரீதியாகவும் அன்பிய குழுமங்களோடு பயணிக்கின்ற போது பங்கேற்பு, ஒன்றிப்பு, பணி என்பவற்றை நாம் எம் அன்பு சமூகத்தில் கண்டுணர முடியும்.

இவற்றையும் கடந்து செல்கையில் பல இடர்களையும், எதிர்ப்புகள், ஏற்காமை, முரண்பாடுகள், சவால்களையும் நாம் எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் சந்தர்ப்பங்களிலும் அன்பிய கத்தோலிக்க திருஅவை வளர்ச்சியின் தடைக்கு விசுவாச சோதனை, பிரிவினைவாதிகள் போன்றவர்களின் செயற்பாடுகளின் போதும் விழிப்புணர்வுடன் இருந்து செயற்பட வேண்டும். (2பேதுரு 2:1) பலத்தின் வீழ்ச்சிக்கு பலவீனமே காரணமென உணர்ந்தவர்களாய் இறை வார்த்தை பற்றிய தெளிவின்மை அறிவின்மையை நீக்க தினம் இறைவார்த்தையை வாசிப்பதன் மூலமும் வலுவான, திடமான, உறுதியான விசுவாச அன்பிய சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். தூய ஆவியின் துணிவும், ஆற்றலும், வழிகாட்டலும் எமக்கு கிடைக்கும். நம்பிக்கையோடு செயலாற்ற செபிப்போம். “நான் உங்களை திக்கற்றவர்களாக விடமாட்டேன்” (யோவா 14:18-21), (1திமொ 4:1-5)

# இரத்தம்

இரத்தம் என்பது சிவப்பு அணுக்கள் 96%, வெள்ளை அணுக்கள் 3%, குருதி சிறுதட்டுக்கள் 1% கொண்ட நீர்மபொருள் ஆகும். மனிதன், விலங்கு, தாவரம் உயிர்வாழ மிகமிக அவசியமானது நீர் தன்மை கொண்ட இரத்தமே. இரத்தத்தில் திண்ம பொருள் 40% நீர்ம பொருள் 60% உள்ளது.

இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களில், ஹீமோகுளோபின் என்ற வேதிப்பொருள் உள்ளது. இதுவே இரத்தத்திற்கு சிவப்பு நிறத்தை கொடுக்கிறது. இரத்தம் பல வகை உண்டு. இரத்த வகைகளை கண்டறிந்து வெளிப்படுத்தியவர் டொக்டர் கார்ல் லாண்ட்ஸ்ரீனர் ஆவார். 70 கிலோ கொண்ட ஒரு மனிதனின் உடலில் 5 தொடக்கம் 6 லீற்றர் வரை இரத்தம் காணப்படும்.

**இரத்தத்தின் செயற்பாடு:**

சுவாச வாயுக்கள் (ஒக்சிசன்) காபனீரொக்சைட், போசணைப் பதார்த்தங்கள், கழிவு பொருட்கள், ஓமோன்கள், ஆகியவற்றை உடலின் பல பாகங்களுக்கும் கொண்டு செல்லல். உடல் வெப்பநிலையை சீராக வைத்திருத்தல். இது மருத்துவத்துறையின் ஆய்வு.

மனித உடலில் இரத்தம் முக்கிய கூறு என்பதால் உயிருக்கு சமமாக கருதப்படுகிறது. இரத்தம் பற்றி விவிலியத்தில் பல்வேறு கருத்தியல்களை காணலாம். யூத மக்கள் (இஸ்ராயேலர்) வாழ்வில் இரத்தம் பற்றிய புரிதல் மாறுபட்டது. இரத்தம் உயிரின் சாரம், இரத்தம் வாழ்வின் மையம், மிருகங்களின் இரத்தம் பாவம் போக்க வல்லது. இது அவர்கள் நம்பிக்கை. எனவே மாடு, ஆடு, செம்மறி போன்ற விலங்குகளை கடவுளுக்கு (யாவேக்கு) பலியிட்டு வந்தனர். லேவி 17:3-5 ஆபிரகாம் தொடக்கம் தாவீது வரை பின்நாளில் பாலஸ்தீனத்தில் குடியேறிய பின் யூத குருக்கள் வரை பீடத்தில் மிருகங்களின் இரத்தத்தை பலியென படைத்தனர். எகிப்தில் கதவு நிலைகளில் குறித்துக் காட்டியது. தி.ப 12:13 மோசேயின் காலத்தில் விலங்குகளின் இரத்தம் பீடத்திற்கு கொண்டுவரப்பட்டு ஒப்புக்கொடுக்கப்பட்டது. இது இரத்தம் இறைவனுக்கே சொந்தம் என்பதை உணர்த்தியது. பெரியகுரு இரத்தத்தை திருத்தூயகத்துள் கொண்டு சென்று இரக்க இருக்கையின் மீது தெளித்தார். லேவி 4:6 மக்களின் பாவ கழுவாயாக இரத்தம் அளிக்கப்பட்டது. விலங்குகளின் இரத்தப்பலி, உயிர்களுக்கான, ஆன்மாக்களுக்கான பரிகாரம் என இஸ்ராயேல் மக்கள் நம்பினர். புதிய நியமத்தில்




இயேசுவின் இரத்தமே ஜெயம். “காளைகள், வெள்ளாட்டுக் கடாக்கள் இவற்றின் இரத்தம் பாவங்களை போக்க முடியாது” எரிபலிகளும் பாவம் போக்கும் பலிகளும் உமக்கு உகந்தவையல்ல… எபி 10:4-8 என தூய பவுல் அடிகளார் மிகத் தெளிவாக விளக்குகிறார். இறைமகன் இயேசுவின் இரத்தம் எல்லா பாவங்களினின்றும் நம்மை தூய்மைப்படுத்தும் 1யோவா 1:7. சிலுவையில் இயேசுவின் குற்றமற்ற இரத்தம், மனுக்குலத்தின் பாவங்களுக்காக சிந்தப்பட்டது.

இறுதி இராவுணவில் “இது எனது உடன்படிக்கையின் இரத்தம் பலருடைய பாவங்களுக்காக சிந்தப்படும் இரத்தம்” மத் 26:28. இயேசு இறைமக்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையில் (திருப்பலியில்) திராட்சை இரசம், இயேசுவின் இரத்தமாக மாறி பாவப் பரிகார மீட்பு செயலாகிறது. “அவரது வியர்வை பெரும் இரத்தத்துளிகளைப் போல தரையில் விழுந்தது” லூக் 22:44. இந்த இயேசுவின் இரத்தத்துளிகள், இராவுணவின் போது, “அருட்சாதன முறையில் நற்கருணை வழியாக அவர் சீடர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும் இயேசுவின் இரத்தம் பாவங்களுக்கு கழுவாய் ஆகிறது என்ற கருத்து திருமடல்களில் பல இடங்களில் காணப்படுகிறது.

- ❖ இரத்தம் சிந்தி மனிதருடைய பாவங்களுக்கு கழுவாய் ஆகுமாறு இயேசுவை கடவுள் நியமித்தார். உரோ3:25
- ❖ “அவருடைய இரத்தத்தால் இறைவனுக்கு ஏற்புடையவர் ஆகிறோம்”. உரோ 5:9
- ❖ கிறிஸ்து இரத்தம் சிந்தி தம் அருள்வளத்திற்கு ஏற்ப நமக்கு மீட்பு அளித்துள்ளார். எபே 1:7
- ❖ இயேசு கிறிஸ்துவோடு இணைந்து அவரது இரத்தத்தின் மூலம் அருகில் கொண்டு வரப்பட்டிருக்கிறீர்கள். எபே 2:13
- ❖ சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தால் அமைதியை நிலை நாட்டவும்… ஒப்புரவாக்கவும், கடவுள் திருவுளம் கொண்டார். கொலோ 1:20
- ❖ அவரது இரத்தத்தால் தூயகத்துக்குள் நுழைய நமக்கு உரிமை உண்டு. எபி 10:19
- ❖ அவரே என்றுமுள்ள உடன்படிக்கையின் இரத்தம். எபி 13:20
- ❖ மாசுமருவற்ற ஆட்டுக்குட்டியை போன்ற கிறிஸ்துவின் உயர் மதிப்புள்ள இரத்தம்… 1பேது 1:19
- ❖ இயேசுவின் இரத்தம் எல்லா பாவத்தினின்றும் நம்மை தூய்மைப்படுத்தும். 1யோவா 1:7

ஆக சிலுவையில் இயேசுவின் சிந்திய இரத்தம் நம்மை கழுவி தூய்மை ஆக்குகிறது. எல்லா பாவங்களிலிருந்தும் நம்மை விடுவிக்கிறது. இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டோம். அகமகிழ்வோம், ஆர்ப்பரிப்போம். முத்து முத்தான இரத்தம் சிந்தியதே பூங்காவில் சொட்டு சொட்டான இரத்தம் கொட்டியதே கல்வாரியில்.

# மரியன்னையின் விண்ணேற்பு விழா

மரியன்னையின் விண்ணேற்பு விழா என்பது உலகிலுள்ள அனைத்துக் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களாலும் கொண்டாடப் படக்கூடிய ஒரு விழா. இயேசுக்கிறிஸ்து தனது தாயாரை நம் அனைவருக்கும் தாயாக இவ்வுலகில் விட்டுச் சென்றார். “பெண்களுக்குள் ஆசிர்வதிக்கப்பட்ட தாய்”, “அருள் நிறைந்த பெண்மணி” என்று பெண்குலத்திற்கு மட்டுமல்லாது உலகத்தில் உள்ள தாய்மார்களின் பொக்கிஷமாக திகழ்பவள் தான் நம் மரியன்னை. எனவே அப்படிப்பட்ட அன்னையின் விழாவைக் கொண்டாடுகிற இவ்வேளையில் அவள் நமக்கு என்ன செய்தியைத் தருகிறாள் என்று சிந்தித்துப் பார்ப்போம்.

மரியாவின் விண்ணேற்புப் பெருவிழாவது கி.பி.8 ஆம் நூற்றாண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் 15 ம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. திருத்தந்தை முதலாம் நிக்கோலாஸ் (கி.பி.858- 867) இவ்விழா வரலாற்றில் என்றும் மறையாத அளவிற்கு திருவழிபாட்டில் ஊன்றச் செய்தார். திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் 1954ஆம் ஆண்டில் அன்னை மரியாள் ஆன்மாவோடும், உடலோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டாள் என்றும், திருச்சபையின் போதனையை விசுவாச சத்தியம் என்றும் பிரகடனப் படுத்தினார். இதற்கு ஓர் இறையியல் அடிப்படையென்றால், “பாவமறியாத மரியாளை மரணம் எப்படித் தீண்ட முடியும்?”



என்பதுதான். இதன்வழியாக அன்னை மரியாள் மரணத்தின் பிடியில் சிக்காமல் விண்ணகம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்ற நம்பிக்கை வேரூன்ற ஆரம்பித்தது.

திருத்தந்தை 12ஆம் பத்திநாதர், தனது சாசனத்தில், அன்னை மரியாளின் மரணம் பற்றி திட்டவட்டமாக எதுவும் கூறாமல் 'தனது வையக வாழ்வு நிறைவெய்தியவுடன் மரியா விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டாள்' என்று மட்டும் குறிப்பிடுகிறார். மரியாள் இயேசுவை தமது உள்ளத்தில் ஏற்று, உதரத்தில் தாங்கி, அவருடைய உணர்வுகளோடு ஒன்றாகி, மீட்புத் திட்டத்தில் முழுமையாகத் துணை நின்றதால், அவள் இயேசுவின் உயிர்ப்பிலும் முதன்மையாக பங்கு பெறுவது தகுதியும் நீதியுமாகும். இது நாம் அனைவரும் பெறப்போகும் விண்ணக மகிமையின் முன்னாக்கமாகவும், முன்னடையாளமாகவும் இருக்கும்.

எனவே அன்னையின் விண்ணேற்பு பெருவிழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் நமது இல்லங்களில் இருக்கக்கூடிய அன்னையரைப் பேணிப் பாதுகாப்போம் அவர்களுக்கு தொண்டு செய்து வாழ்வோம். இன்னும் சிறப்பாக அன்னை மரியாளைப் போன்று நம்மோடு வாழும் மக்களின் துன்பம் கண்டு இறங்கி, அவர்களின் துயர் துடைப்போம். அதன் வழியாக இறையருள் பெறுவோம். அனைவருக்கும் மரியன்னையின் விண்ணேற்புப் பெருவிழா நல்வாழ்த்துகள்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.241
## யோவான் 1 - 21 வரை

உங்கள் விடைகளை ஆவணி மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்டசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை பிறிதொரு தாளில் எழுதி அனுப்ப வேண்டும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | 15 | 02 | | | | | 03 |
| ★ | | | 04 | ★ | 33 | | | ★ | |
| 05 | | | | 06 | | | 12 | | 09 |
| | 07 | | 10 | 32 | | 11 | | 16 | |
| 13 | | | | ★ | 08 | | | | |
| | 14 | | 17 | | | | | | 25 |
| | ★ | | | 30 | 31 | 27 | | 26 | ★ |
| 18 | | | 28 | 21 | | | 22 | | |
| | | 29 | | | ★ | ★ | | | 24 |
| 20 | | | | | 19 | | | | 23 |

உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(-) என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறை வார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

**இடமிருந்து வலம்**

1. .............. யான அவர் உலகில் இருந்தார்.
2. கடவுளை ............... என்றுமே கண்டதில்லை.
5. தம் ஒரே மகன்மீது__ கடவுள் உலகின்மேல் ...................... கூர்ந்தார்
6. ............... பொங்கி எழுந்தது.
7. பின்னர் தம் சீடரிடம், "இவரே உம் ..............." என்றார்.
8. மறைநூல் கூறுவதுபோல் __ ஆறாய்ப் பெருக்கெடுத்து ........... என்றார்.
18. "மறுபடியும் பிறந்தாலன்றி __இறையாட்சியைக் ................ இயலாது.
19. இதோ என் கைகள். இங்கே உன் விரலை ...............
20. அவர்கள் அவரிடம், "ஆண்டவரே, ................. பாரும்" என்றார்கள்.
21. அன்றே இயேசுவின் சீடருள் பலர் அவரை ................ விலகினர்.
22. இயேசு அவரிடம், "நீ என்னைக் கண்டதால் ..............னாய்.

**வலமிருந்து இடம்**

3. தொடக்கத்தில் ................. இருந்தது.
4. ................ மெசியாவின் மாட்சியைக் __இவ்வாறு கூறினார்.
9. .............. என்பவர் அவர்களுள் ஒருவர்.
11. நீ மும்முறை என்னை மறுதலிக்குமுன்___ உனக்குச் ................கிறேன்" என்றார்.
15. பேதுருவால் ........... வெட்டப்பட்டவருக்கு இவர் உறவினர்
19. .......................... முழுவதும் அழிந்து போவதைவிட ஒரு__ உணரவில்லை" என்று சொன்னார்.
23. என் தந்தையின் இல்லத்தைச் ................ ஆக்காதீர்கள்"..
24. மரியா திரும்பிப் பார்த்து, "................." என்றார்.
25. நான் கொடுக்கும் தண்ணீர் __ பொங்கி ................... ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும்" என்றார்.
26. என்னை நம்புவோர் ............. வாழ்வைக் கொண்டுள்ளனர்.
29. அவர் "............" என்று மறுதலித்தார்.

**மேலிருந்து கீழ்**

3. அவரிடம் வந்து, "யூதரின் அரசே ........................!" என்று சொல்லி அவருடைய கன்னத்தில் அறைந்தார்கள்.
4. என்னை வெறுப்போர் ................................ தந்தையையும் வெறுக்கின்றனர்.
5. .....................யை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்.
12. .................. பற்றிய அவர்கள் கருத்து தவறானது.
13. பன்னிருவருள் ஒருவரான ...................... என்னும் தோமா.
16. இனி '................' எனப்படுவாய் என்றார்.
10. "விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு ................" என்று இயேசு கூறியதால் __ முணுமுணுத்தனர்.
17. என் தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் ................ உள்ளன.
21. யூதருடைய பாஸ்கா ........... அண்மையில் நிகழவிருந்தது.
28. ................. அவரைக் குறித்துச் சான்று பகர்ந்தீரே!
30. பாவிகளுக்குக் கடவுள் ................. சாய்ப்பதில்லை.

**கீழிருந்து மேல்**

10. ............. கொடுக்கும் போதனை என்னுடையது அல்ல : அது என்னை அனுப்பியவருடையது.
11. "ஐயா, நீர் அவரைத் தூக்கிக்கொண்டு போயிருந்தால் எங்கே வைத்தீர் எனச் ............... .
12. எங்கள் முன்னோர் ........................ நிலத்தில் மன்னாவை உண்டனரே!
14. அந்த இடத்திற்கு எபிரேய மொழியில் '.............' என்பது பெயர்.
24. அதற்கிடையில் சீடர். "......................., உண்ணும்" என்று வேண்டினர்.
25. குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு அவருக்கு .......... கொண்டுபோய்,
27. மானிட மகனுடைய சதையை ........................ அவருடைய இரத்தத்தைக் __ வாழ்வு அடைய மாட்டீர்கள்.
20. .................. நிறைய பெரிய மீன்கள் இருந்தன.
29. ................ ஒருமித்து ஓடினர்.
30. நானே திராட்சைச் ..................,
31. .............. யாரும் செய்திராத செயல்களை__ப் பாவம் இராது.
32. மேலும் "வானம் திறந்திருப்பதையும் கடவுளின்__ காண்பீர்கள் என .................... உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்".
33. ............. நான் யோவானின் சீடர் சிலருக்கும்__ விவாதம்

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 239 சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:

**முதலாம் பரிசு:**
A. பெபிஷா
புதுக்கமம்.

**இரண்டாம் பரிசு:**
நி. நியோவின் பெர்னாண்டோ
முத்தரிப்புத்துறை.

**மூன்றாம் பரிசு:**
நி. ஸ்ரெலாமேரி
வவுனியா.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 98 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 87 பேர்.**

### விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.239ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. டா. மேரி யோசேப்பின் - பள்ளிமுனை.
2. G. ஜொபிஷா - சிறுதோப்பு.
3. G. ஜொகிஷா - சிறுதோப்பு.
4. S. பத்திநாதன் பீரிஸ் - பெரியபண்டிவிரிச்சான்.
5. S. சகாயமலர் - எழுத்தூர்.
6. P. நீக்கலஸ் - பெற்றா.
7. ம. மகாரத்தினம் - நெளுக்குளம்.
8. T. மிறோன் றோச் - பள்ளிமுனை.
9. ஆன் ஸ்ரேசி றூபறாஜ் - பள்ளிமுனை.
10. R. சறோஜினி - ஜோசவ்வாஸ் நகர் பங்கு.
11. S. ஜோயல் - திருநாவற்குளம்.
12. N. லிகாரா - கீரி.
13. ம. நெரோஜன் - கீரி.
14. R. ஜெகநாதன் -மடுக்கரை.
15. நி. நிஸ்ரின் பெர்னாண்டோ - முத்தரிப்புத்துறை.
16. X. குணமணி - பெரியகடை.
17. M. பிளண்ரீனா - மன்னார்.
18. S. செபமாலை மார்க் - வங்காலை
19. எமி றொபின்சன் பிகிறாடோ - பள்ளிமுனை கிழக்கு
20. லிவி றொபின்சன் பிகிறாடோ - பள்ளிமுனை கிழக்கு.
21. றேச்சல் தேவநேசன் - பள்ளிமுனை மேற்கு.
22. ரேறியன் யூட் தேவநேசன் - பள்ளிமுனை மேற்கு.
23. அ. தர்மிக்கா - துள்ளுகுடியிருப்பு.
24. க. டர்ஷிக்கா - நானாட்டான்.
25. க. ஜினுவிக்கா - நானாட்டான்.
26. S. ஆன் றெபேக்கா - எமில்நகர்.
27. S. ஆன் தெபோறா - எமில்நகர்.
28. யேசுநேசன் தர்சினி - திருநாவற்குளம்
29. L. றியான் சட்விக் - எமில்நகர்.
30. J. சாரா - எமில்நகர்.
31. S. நோபிள் - எமில்நகர்.
32. E. விஜித்குமார் ஜெரினாறோஸ் - ஓலைத்தொடுவாய்.
33. E. விஜித்குமார் சமீரா - ஓலைத்தொடுவாய்.
34. இ.விஜித்குமார் ஜெனிவாறோஸ் - ஓலைத்தொடுவாய்.
35. சந்தியோகு போல்றொபின்சன் - உயிலங்குளம் பங்கு.
36. வின்சன் யோகவதி - உயிலங்குளம் பங்கு.
37. A. ஜெயக்குமார் அபர்ணா - தோட்டவெளி.
38. அன்ரன் ஜெயக்குமார் அபிசான் - தோட்டவெளி
39. A.P. குணாளன் மெக்ஸ்வெல் - அளவக்கை பங்கு.
40. அ. குணாளன் அபினாஷ் - அளவக்கை பங்கு.
41. சொ. சைலோ - கட்டைக்காடு பங்கு.
42. கி. ஆன் சாலிக்கா - கட்டைக்காடு பங்கு.
43. றெ. மேரி யோசவின் - நானாட்டான்
44. செ. பெலிஸிற்றாஸ் - அடம்பன்.
45. யோ. யூடிற் டலிமா - வங்காலை.
46. P. அன்ரனிகுறுஸ் சரன்சலாமேரி - துட்டுவாகை.
47. ச. ஜஸ்மின்கசில் - மடுக்கரை
48. வயலட் யோண் - யாழ்ப்பாணம்
49. அ. அகிரன் குரூஸ் - தேவன்பிட்டி.
50. அ. அலைக்சினி - தேவன்பிட்டி
51. அ. அபிகாசினி - தேவன்பிட்டி.
52. ம. மரியதிலிப் - தேவன்பிட்டி.
53. விமல்ராஜ் அன்ரனிற்றா - ஜோசப்வாஸ் நகர்.
54. S. டினோசினி - மானங்கவெளி.
55. கி. பெரோன் பெரிஸ் - சின்னப்பண்டிவிரிச்சான்.
56. றாஜுப் றக்சிகா டயஸ் - எமில்நகர்.
57. டெஸ்மன் டெஸ்மீரா - தேவன்பிட்டி.
58. றிசிகேஸ் றிஸ்னிக்கா - தேவன்பிட்டி.
59. A. அபி - புதுக்கமம்.
60. N. சிபியன் பெர்னான்டோ - பேசாலை.
61. S. கெயில் கெவோன் - பேசாலை.
62. திலீபன் திபிஷாளினி - யாழ்ப்பாணம்.
63. அன்ரன் டேவிட் சந்தோஸ் - யாழ்ப்பாணம்.
64. T.S. லீலாவதி - சாந்திபுரம்.
65. A. லூர்த்து நாயகி - தேவன்பிட்டி.
66. அ. அமல அபிநிதன் - தேவன்பிட்டி.
67. செ. சியோன்சி - தேவன்பிட்டி.
68. அ. அமல அபின்ஷா - தேவன்பிட்டி
69. A. அமிரா - தேவன்பிட்டி.
70. A. சுகணராஜ் - தேவன்பிட்டி.

## 14ம், 13,1/2ம் ஆண்டு நினைவஞ்சலி





ஆன்மேரி திரேசா பயஸ் பிலிப்புப்பிள்ளை (பெரியா)

திறினிற்றி அன்ரன் கமலநேசன் (குஞ்சு)

**(கொன்வென்ட் வீதி, மன்னார்.)**

மலர்வு: 27.08.1945
உதிர்வு: 06.08.2009

மலர்வு: 29.04.1952
உதிர்வு: 08.02.2010


**"அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர்பெற்று எழுகிறது" (1கொரி 15:42)**

அன்பான எம் தெய்வங்களே!
எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டுகள் பல ஆனாலும்
எம்மைவிட்டு விலகாது உம் நினைவு
இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க
நாளும் பொழுதும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

**உம் பிரிவால் துயருறும்:**
**சகோதரர்கள், சகோதரிகள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.**
**தகவல் : கசியன் பிலிப்புப்பிள்ளை, இலண்டன்**

## 16ம் ஆண்டு நினைவஞ்சலி

**பிறப்பு**
**20**
**03**
**1968**



**இறப்பு**
**07**
**09**
**2007**

# அமரர். திரு. ராசையா யோகராசா

**கோயில்குளம், வவுனியா.**

அப்பா என்று அழைக்கும் பாக்கியம்
உன் மகளுக்கு கிடைக்கவில்லை
உன் அருகில் இருக்க எனக்கு ராசி இல்லை
அப்பா உங்கள் நினைவால் நாங்கள்
என்றும் வருந்துகின்றோம்...

**பிரிவால் துயருறும்**
**அம்மா, ஐயா, மனைவி, மகள், சகோதரிகள், சகோதரர்கள் மற்றும் உறவினர்கள்.**




# நினைவு கூருகின்றோம்..!

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

"ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது" (தி.பா 84:1)



| தாய் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 02 | 07 |
| 12 | 09 |
| 1944 | 2021 |

### பொன்ராஜா பிறிஜற் மேரி பிறீடா

புத்திரர் கண்டான், முருங்கன்.

அம்மா! உங்களைப் பிரிந்து ஈராண்டுகள் எங்கள் இதயங்களில் அமுதாக எம்முடன் கலந்த பிரிக்க முடியாத உங்கள் நினைவுகள் கண்ணீர்த் துளிகளாய் ஆகிவிட்டன. இரவு பகலாக உங்கள் பேரப்பிள்ளைகள் ஐவரைப் பற்றியும் கனவு கண்டீர்கள். உங்கள் கனவுகள் நனவாகும் நேரத்தில் நீங்கள் இல்லையே அம்மா! காலமெல்லாம் சிரித்து வாழ நீங்கள் இருப்பீர்கள் என்று எண்ணியிருந்தோம்.

கலங்கி வாழ கண்ணீர் மட்டுமே இப்போது மிஞ்சியுள்ளது. உங்கள் ஆன்மா இறைவன் சந்நிதியில் சமாதானத்தில் இளைப்பாறப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்
அன்புக் கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணகம் | விண்ணகம் |
|---|---|
| 15 | 09 |
| 09 | 08 |
| 2001 | 2022 |

### அமரர். லோறன்ஸ் அஜய்காந் [அஜய்]


தலைமன்னார்

அமைதியின் உருவமாகவும், அடக்கத்தின் இருப்பிடமாகவும், பண்பின் பெருந்தகையாகவும், பாசத்தின் உறைவிடமாகவும் எம் மத்தியில் அன்பு ஒளியாக இருந்த உத்தமனே!!
மண்ணோடு உன் பூவுடல் மறைந்து விட்டாலும் உன் நினைவுகள் எங்கள் இதயத்தில் இருந்து ஒருபோதும் மறைவதில்லை

துயர் பகிர்வோர்: அன்புடன் குடும்பத்தினர்.

## 1ம் ஆண்டு நினைவு

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான் (யோவான் 11:25)



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 13 | 24 |
| 02 | 08 |
| 1946 | 2022 |

### அமரர். திரு. லோறன்ஸ் தானியேல்

பள்ளக்கமம், முருங்கன்.

கண்முன் தோன்றிய கனிவான உறவொன்று இன்று காணாமல் போனதெங்கே? நீங்கள் காட்டிய அன்பு வழியில் இன்று நாங்கள் கால் பதித்து நடக்கின்றோம்...
உங்கள் புன்சிரிப்பான பூ முகம் பூமியில் இனி வருமோ நாங்கள் தவிக்கின்றோம் தவிப்பை யார் துடைப்பார்...
காலம் ஏன் உம்முடன் என்னை கனதூரம் கொண்டு செல்லவில்லை, பாதி வழியில் விட்டு சென்றதனால் பாவிகள் நாம் பரிதவித்து துடிக்கின்றோம், சோகம் நிலையில்லை சொர்க்கம் உனக்காக

பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார் உறவினர்கள். தகவல் : அன்பு மகள் கனிஸ்ரா.

## விண்ணக வாழ்வில் மூன்றாண்டு நினைவலைகள்

"இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாயென்று உறுதியாக நான் உனக்குச் சொல்லுகிறேன்." (லூக்கா 23:43)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1998 | 2020 |
| 12 | 08 |
| 19 | 05 |

### செல்வன் இருதயநாதன் றோமியோ குருஸ் (றோமி)

கரயாக்குளி, முள்ளிநகர்.

அழகான உன்முகம் - அதில் அழியாத புன்னகை வாழ்ந்த நாட்களை வசந்தமாக்கி விட்டுச் சென்ற வாடா மலரே றோமி உதிர்ந்தது நீங்கள் மட்டுமல்ல உடைந்தது எங்கள் இதயமே! காலனவன் விரித்த வலையில் தடம் தெரியாமல் கண் இமைப்பொழுதில் மாட்டிக் கொண்டாய் இது உன் விதியா? இல்லை மனித சதியா? எண்ணிப் பார்க்கவும் இயலாத ஏக்கத்தை எமக்களித்து விட்டு எட்டாத தூரம் சென்றது ஏனோ மகனே! நீயில்லா எம் வாழ்வு நிலை தடுமாறி கடந்து செல்ல! நின்குரலில்லா உலகில் நிம்மதியேதும் இல்லை மகனே! நீ எம்மை விட்டு பிரிந்ததால் எம் வாழ்வு இருளாய் போனதடா! விழியிலே உன்னை வைத்து வழியிலே உன்னை எதிர்பார்த்து விழிநீரால் சொல்கின்றோம். மூன்றாண்டுகள் ஓடி மறைந்தாலும் உன் அழகிய முகம் மறைந்திடுமா மகனே! உன் ஆன்மா இறைவனில் இன்புற இறைவனை தினமும் வேண்டுகின்றோம் மகனே!

இவரின் பிரிவால் துயருறும்: அப்பா, அம்மா, அக்காமார், அண்ணாமார், அத்தான், அண்ணி, மருமகன்மார், உற்றார், உறவினர்கள்.

## 5ம் 4ம் ஆண்டு நினைவு

இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய் என்று உறுதியாக நான் உனக்குச் சொல்லுகிறேன் (லூக்கா 23:43)



### அமரர். சந்தாம்பிள்ளை கபிரியேல்பிள்ளை (பொன்னுக்கோன்)

பிறப்பு: 1930.08.30
இறப்பு: 2018.09.05



### அமரர். கபிரியேல்பிள்ளை சூசையானாள்

பிறப்பு : 1936.02.10
இறப்பு : 2019.08.16

மானங்கவெளி, முருங்கன்.

கண்முன் தோன்றிய கனிவான உறவொன்று இன்று காணாமல் போனதெங்கே? நீ காட்டிய அன்பு வழியில் இன்று நாங்கள் கால் பதித்து நடக்கின்றோம்...

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 28 | 06 |
| 12 | 08 |
| 1942 | 2022 |


### அதிரியான் கிறிஸ்ரிமேரி வாஸ்

(வங்காலை 03)

அம்மா! உன் அன்பை அமுதாக்கி, அமுதை பாலாக்கி பாலை உணவாக்கி, உணவை உணர்வாக்கி, உணர்வுகளை பரிசுத்தமாக்கி வாழ வழிகாட்டினாயே உம் வழிகாட்டலால் வாழ்கின்றோம். நீங்கள் விட்டுச்சென்ற, அன்பையும் ஒற்றுமையையும் மன்னிப்பையும் பொறுமையையும் தேவ பயத்துடன் என்றும் வாழ்வாக்குவோம் உங்கள் ஆத்மா இறைவனில் இளைப்பாற வேண்டுகின்றோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் நினைவில் பாசமுடன் துயருறும்: கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்

## 35ஆம் ஆண்டு விண்ணக வாழ்வில்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 | 11 |
| 09 | 08 |
| 1944 | 1988 |

### P.கிறிஸ்துராசா பீரிஸ் (A.M.C ஊழியர்)

முத்தரிப்புத்துறை

இயற்கையின் ஓர் அற்புத படைப்பு எனது அப்பாவின் இதயம் தான்.
இந்த இதயத்திலிருந்து பெருக்கெடுத்ததெல்லாம் அன்பு என்னும் நீரூற்றே!
நம் வாழ்க்கையை விருட்சமாக்க தன்னை வேராக்கி கொண்டவர் எம் தந்தை.
கிறிஸ்துராசா பீரிஸ் என்னும் நாமம் தாங்கியதாலோ நீரும் இயேசுவைப் போல இளம் வயதினில் சிறுபிள்ளையாகிய எம்மை விட்டு அன்று இறையடி சேர்ந்தீர்.
இறை விசுவாசத்தில் நீர் வாழ்ந்ததால் தான் நாம் இன்று இகமதில் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றோம்.
பிரிவு எம்மை வருத்தினாலும் உம் ஆசீர்வாதம் இன்றும் எம்முடன் பயணிக்கிறது
இறையமைதியில் இளைப்பாற இன்னும் நாம் இறைவனிடம் வேண்டிக் கொள்கின்றோம்
அமைதியாய் உறங்கிடுவீர் எம் பாசமிகு தந்தையே!

பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள், மருமகள், மருமகன், பேரப்பிள்ளைகள்

"மன்னா பத்திரிகை"
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 076-3801841
- mannamnrc@gmail.com - manna.lk - Mannar Catholic Media, Madhu Matha TV

"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 077-5338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகல விதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும், தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.